பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 202

செவ்வாய்க்கிழமை
17 ஜூன் 2025

ஆனி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

கிளிநொச்சி

## இராமநாதபுரத்தில் சடலமொன்று மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 17
கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி பத்துவீட்டுத்திட்டப் பகுதியில், நீர்ப்பாசன வாய்க்கால் ஒன்றுக்குள் இருந்து ஆணொரு 11

வலி.வடக்கில்

# படையினரின் பாதுகாப்பு வேலியால் பயனற்றுப்போனது காணிவிடுவிப்பு!

### 15 மில்லியன் ரூபா அரச நிதி வீண் நிதிகோரி அடம்பிடிக்கும் இராணுவம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வலி. வடக்கின் பலாலி வடக்கில் கடந்த ஆண்டு விவசாய நடவடிக்கைக்காக காணிகள் விடுவிக்கப்பட்டு 15 மாதங்கள் கடந்துள்ளநிலையில், தற்போதும் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டில் இறுக்கமான கண்காணிப்பிலே உள்ளதாகப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். 11

## பருத்தித்துறை நகரசபையில் பேரவையின் ஆட்சி மலரும்!

யாழ்ப்பாணம், ஜூன் 17
பருத்தித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியப் பேரவையின் ஆட்சி அமைவதற்குக் கூடுதலான சாத்தியங்கள் உள்ளன என்று தெரியவருகின் 11

## பருத்தித்துறை பிரதேசசபையில் தமிழரசின் ஆட்சிக்கு வாய்ப்பு?

யாழ்ப்பாணம், ஜூன் 17
பருத்தித்துறை பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்கு வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. 10

## கரவெட்டிப் பிரதேசசபை; தமிழரசுக்கட்சி ஆதிக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 17
வடமராட்சி தெற்குமேற்கு (கரவெட்டி) பிரதேசசபையில் இன்று தமிழரசுக்கட்சி ஆட்சியமைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 11

## வவுனியா மாநகரசபை; ஆட்சியமைத்தது சங்கு

வவுனியா, ஜூன் 17
வவுனியா மாநகரசபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆட்சியமைத்துள்ளது. இதன்படி வவுனியா மாநகரசபையின் மேயராக காண்டீபனும், பிரதி முதல்வராக கார்த்தீபனும் தெரிவுசெய்யப் 11

வவுனியா

## தெற்கு சிங்களப் பிரதேசசபை தேசிய மக்கள் சக்தி வசம்!

வவுனியா, ஜூன் 17
வவுனியா தெற்கு சிங்களப் பிரதேசசபையை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. வவுனியா தெற்கு சிங்களப் பிரதேசசபையின் அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி 11

## தீவகத்தின் சபைகளில் தனித்தே ஆட்சியமைப்பு

### தமிழரசின் உறுப்பினர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17
தீவகத் தொகுதிக்குட்பட்ட நெடுந்தீவு, வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசசபைகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைப்பதை மக்கள் விரும்பவில்லை என்பதால் நாம் தனித்து ஆட்சியமைப்பதற்கான முயற்சி 11

## கொழும்பு மாநகரை கைப்பற்றியது அரசு

கொழும்பு, ஜூன் 17
இலங்கையிலுள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களில் மிக முக்கியமான சபையாகக் கருதப்படும் கொழும்புமாநகரசபையை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. இதற்கமைய கொழும்பு மாநகர மேயராக 11



## 50 கிராம் ஹெரோய்ன்; இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 17
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், 50 கிராம் ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய பொலிஸ் காவலில் வைக்கப் பட்டுள்ளார். 11




## யாழில் பெற்றோலுக்கு செயற்கைத் தட்டுப்பாடு

### இரவிரவாக நீண்டது வரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணத்தில் பெற்றோலுக்குச் செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்தப் பட்டுள்ளது. பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது எனப் பரப்பப்பட்ட போலி 11



நெடுந்தீவில்

## ஓட்டோ மோதியதில் ஒருவர் பரிதாபச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 17
நெடுந்தீவில் வீதியால் சென்றவரை ஓட்டோவொன்று மோதித்தள்ளியதில் அந்த நபர் பரிதாபமாக உயிரிழந்தார். நெடுந்தீவு 11ஆம் வட்டாரத் 11

## ஹெரோய்னுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 17
20 கிராம் ஹெரோய்னுடன் எழுதுமட்டுவாழ் சோதனைச்சாவடியில் வைத்து இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விசேட எழுத்து |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 16.06.2025 | 4104 | Y | 04 12 35 52 | Y |
| ஹந்தஹறண ராசி சுப பலன் | 16.06.2025 | 1171 | வெற்றி இலக்கினம்: மேஷம் | 12 34 46 52 | |
| NLB ஜய | 16.06.2025 | 0130 | I | 0 4 8 3 | |
| மெகா பவர் | 16.06.2025 | 2210 | N (சுப்பர் இலக்கம் 05) | 13 48 69 70 | |
| மஹஜன சம்பத | 16.06.2025 | 5862 | Z | 3 9 7 3 1 9 | |
| தன நிதானய | 16.06.2025 | 1892 | T | 20 23 32 67 | T |
| அத சம்பத | 16.06.2025 | 0437 | Z | 7 3 1 9 | |

| DLB லொத்தர் | திகதி | தினம் | ஆங்கில எழுத்து / ராசி | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் / சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|---|
| சுபிரி தன சம்பத | 16.06.2025 | திங்கட்கிழமை | D | 9 5 0 7 9 6 | 0570 |
| Super Ball | 16.06.2025 | திங்கட்கிழமை | F | 02 30 32 36 | சீட்டிழுப்பு வாரம் 2836 |
| சனிதா | 16.06.2025 | திங்கட்கிழமை | R | 49 56 74 79 | 4997 |
| லக்ன ராசி | 16.06.2025 | திங்கட்கிழமை | மேடம் | 28 38 39 57 | சீட்டிழுப்பு வாரம் 4548 |
| KAPRUKA | 16.06.2025 | திங்கட்கிழமை | M (சுப்பர் இலக்கம் 09) | 36 39 46 74 | 2012 |
| அத கோடிபதி | 16.06.2025 | திங்கட்கிழமை | V | 13 15 33 69 | 2662 |
| JAYODA | 16.06.2025 | திங்கட்கிழமை | N | 22 55 63 67 | 2135 |

# ஐ.எம்.எப். உதவிகளைப் பெறாத நிலைமையை ஏற்படுத்துவோம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 17**

**இலங்கை தற்போது பெற்றுக்கொள்ளும் சர்வதேச நாணயநிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதித்திட்டத்தை, சர்வதேச நாணயநிதியத்துடன் இவ்வாறான ஒரு திட்டத்தில் ஈடுபடும் கடைசிச் சந்தர்ப்பமாக மாற்ற விரும்புகின்றேன் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை வந்துள்ள சர்வதேச நாணயநிதியத்தின் முதன்மைப் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத்தின் பங்கேற்புடன் நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்ற விசேட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2028ஆம் ஆண்டுக்குள் கடன்களை அடைப்பதற்குத் தேவையான பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார நிலைத்தன்மையை உருவாக்கமுடியும் என்று இலங்கை நம்புகின்றது என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மைப் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத்துக்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையே நேற்றுக் கொழும்பில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் கலாநிதி கீதா கோபிநாத் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவில், "பொருளாதார சீர்த்திருங்களில் இலங்கையின் வலுவான செயற்றிறன் மற்றும் உத்வேகத்தைப் பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பாக ஜனாதிபதி அநுரவுடன் கலந்துரையாடினேன். இந்தச் சீர்திருத்தங்களுக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பு அனைத்து இலங்கையர்களுக்கும் நீடித்த நிலைத்தன்மை மற்றும் செழிப்புக்கு இன்றியமையாதது" என்று குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# 485 பேர் கைது

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 485 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஹெரோய்ன் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 141 பேரும், ஐஸ் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 163 பேரும், கஞ்சா உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 165 பேரும், கஞ்சாச் செடிகளுடன் 4 பேரும், போதை மாத்திரைகள் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 12 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 241 கிராம் 616 மில்லிகிராம் ஹெரோய்னும், 590 கிராம் 345 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 192 கிலோ 807 கிராம் 106 மில்லிகிராம் கஞ்சாவும், ஆயிரத்து 938 கஞ்சாச் செடிகளும், ஆயிரத்து 324 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-41-இ)

# ஐ.எம்.எப். இறுதித் திட்டமாக இந்தத் திட்டம் மாறவேண்டும்

## கீதா கோபிநாத் தெரிவிப்பு

இலங்கைக்குத் தேவைப்படும் சர்வதேச நாணயநிதியத்தின் இறுதித் திட்டமாக தற்போதைய திட்டம் இருக்கவேண்டும் என்று சர்வதேச நாணயநிதியத்தின் முதன்மைப் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத் தெரிவித்துள்ளார். இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மைப் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத்தின் பங்கேற்புடன் நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்ற விசேட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையின் அனைத்து குடிமக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையை மேம்படுத்தும் நிலையான வளர்ச்சியில் சர்வதேச நாணயநிதியம் உறுதியான பங்காளியாகவிருக்கும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தது போன்று, இந்த நேரம் வித்தியாசமானதாக இருக்கவேண்டும். இலங்கைக்குத் தேவைப்படும் சர்வதேச நாணயநிதியத்தின் இறுதித் திட்டமாக இதை மாற்றவேண்டும். இலங்கை தற்போதைய பாதையில் தொடர்ந்தால் அது சாத்தியம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# முகத்தில் மிளகாய்த்தூள் தூவி கணவனின் வாகனத்துக்கு தீ

## மனைவியும், மகளும் கைது

கொழும்பு, ஜூன் 17

கணவனின் முகத்தில் மிளகாய்ப்பொடியைத் தூவி வாகனங்களுக்குத் தீ வைத்தனர் என்று கூறப்படும் மனைவியும் மகளும் பலாங்கொட பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் இரத்தினபுரி, பலாங்கொட, தெஹிகஸ் தலாவப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக கணவனும், மனைவியும் பிரிந்து வாழ்கின்றனர். நேற்றுமுன்தினம் கணவரின் வீட்டுக்குச்சென்ற மனைவியும் மகளும், கணவன் முகத்தில் மிளகாய்ப்பொடியைத் தூவியதுடன், கணவரின் மோட்டார் சைக்கிள் மற்றும் கப் ரக வாகனத்துக்கு தீ வைத்துத் தப்பிச்சென்றுள்ளனர். கணவர் பிரதேசவாசிகளால் பலாங்கொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளநிலையில், கப் ரக வாகனத்துக்குச் சிறிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சந்தேகநபர்களான 43 வயதுடைய மனைவியும், 23 வயதான மகளும் பலாங்கொடப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# வாடகைக்கு எடுத்த வாகனத்தை விற்பனை செய்த கில்லாடிகள் கைது

வாடகைக்கு வாகனங்களைப் பெற்றுப் போலியான ஆவணங்களைத் தயாரித்து விற்பனைசெய்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடவத்தையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து போலித் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், அண்மையில் பதிவுசெய்யப்பட்ட இரு வாகன இலக்கத்தகடுகள், ஐந்து கைபேசிகள், ஒரு முச்சக்கரவண்டி, 23 கிராம் ஐஸ் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அநுராதபுரத்தில் வாடகைக்குப்பெற்ற வாகனம் ஒன்றை ஒரு கோடி ரூபாவுக்கும், பொரளையில் வாடகைக்குப்பெற்ற கார் ஒன்றை 90 இலட்சம் ரூபாவுக்கும் , பாணந்துறையில் வாடகைக்குப் பெற்ற கார் ஒன்றை 58 இலட்சம் ரூபாவுக்கும், மொரகஹவேவில் வாடகைக்குப் பெற்ற கார் ஒன்றை 50 இலட்சம் ரூபாவுக்கும், வெல்லம்பிட்டியவில் வாடகைக்குப் பெற்ற கார் ஒன்றை 42 இலட்சம் ரூபாவுக்கும் விற்பனை செய்துள்ளனர். 30 மற்றும் 36 வயதுடைய சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 10 ஆண்டுகளில்

# சுங்கத்திணைக்கள அதிகாரிகளுக்கு பில்லியன் கணக்கில் கொடுப்பனவு!

**கொழும்பு, ஜுன் 17**

**2012ஆம் ஆண்டுக்கும் 2023ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சுங்கத்திணைக்கள அதிகாரிகளுக்கு பில்லியன் கணக்கான நிதி மேலதிக நேரக் கொடுப்பனவாகவும், வெகுமதியாகவும் வழங்கப்பட்டுள்ளது என்று தேசிய கணக்காய்வு அதிகாரசபை கண்டறிந்துள்ளது.**

இந்தக் கொடுப்பனவுகளுக்கு நிதி அமைச்சின் அனுமதி பெறப்படவில்லை என்று தேசிய கணக்காய்வு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதேவேளை, 2017ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் தண்டப்பணம் குறைவாக அறவிட்டமையால் அரசாங்கத்துக்கு 30 வீத வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தேசிய கணக்காய்வு அதிகாரசபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கையொப்பங்கள் இடப்பட்டே மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. கைவிரல் அடையாள இயந்திரத்தரவுகள் பயன்படுத்தப்படவில்லை. கொடுப்பனவுகள் வழங்குவதில் இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். ஊழியர்களின் தினவரவுப் பதிவேடுகள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுப் பதிவேடுகள் உரியவகையில் பேணப்படவேண்டும் என்று தேசிய கணக்காய்வு அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது. (எ-6)

## இஸ்ரேல் வேலைவாய்ப்பு தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, ஜுன் 17

இஸ்ரேலில் உள்ள பதற்றமான சூழ்நிலை காரணமாக, இலங்கையர்களை வேலைவாய்ப்புக்காக அங்கு அனுப்புவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேலில் கட்டுமானம், விவசாயம் போன்ற துறைகளில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர். இந்தநிலையில், அங்கு சூழ்நிலை மேம்படும்வரையில் வேலைவாய்ப்புக்காகப் புதிதாக இலங்கையர்களை அனுப்புவதை இடைநிறுத்துமாறு இலங்கைத் தூதரகம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு அறிவித்துள்ளது. இதேவேளை, இலங்கையிலிருந்து நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக இஸ்ரேலுக்குச் செல்வதற்குத் தகுதிபெற்றுள்ளனர். (எ-41-இ)

## இஸ்ரேல்-ஈரான் மோதலில் இரு இலங்கையர்கள் காயம்

கொழும்பு, ஜுன் 17

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் நடந்துவரும் மோதல் காரணமாக, இஸ்ரேலில் இரண்டு இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் உள்ள பேட் யாம் பகுதியில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் இலங்கைப் பெண் ஒருவர் தோளில் காயமடைந்தார். அவர் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக இலங்கைத் தூதரகத்திற்கு மாற்றப்பட்டார். நேற்றுமுன்தினம் பினெய் பிராக் பகுதியில் ஈரானிய ஏவுகணைத் தாக்குதலில் இலங்கைக் கட்டுமானத் தொழிலாளி ஒருவரின் காலில் காயம் ஏற்பட்டுள்ளது. அவருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன என்று நிமல் பண்டார குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



## இஸ்ரேலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜுன் 17

ஈரான்மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலைக்கண்டித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. "இஸ்ரேலிய இரத்தவெறியை எதிர்ப்போம்", "பலஸ்தீனம் விடுதலையடையவேண்டும்" போன்ற மும்மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-6)

## தயா கமகேவின் நிறுவனங்களை ஏலத்தில் விட நீதிமன்று உத்தரவு!

கொழும்பு, ஜுன் 17

முன்னாள் அமைச்சர் தயா கமகேவுக்குச் சொந்தமானவை என்று கூறப்படும் மூன்று நிறுவனங்களின் பொது ஏலத்தை நடத்த கொழும்பு வணிக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எதிர்வரும் ஜுலை மாதம் 2ஆம் திகதி காலை 10 மணிக்கு ஏலம் நடைபெறும் என்று கொழும்பு வணிக நீதிமன்றத்தின் பதிவாளர் மற்றும் பிரதிநிதியாளர் அறிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் தயா கமகே 'பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ்' நிறுவனத்துக்குச் செலுத்தவேண்டிய 104,229,342 ரூபாவை வசூலிக்கும் நோக்கில் மூன்று நிறுவனங்களையும் பொது ஏலத்தில் விட உத்தரவிடப்பட்டுள்ளது. 'பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ்' நிறுவனத்திற்குச் செலுத்தவேண்டிய 108,309,342 ரூபாவில் சுமார் 4,080,000 ரூபாவை பிரதிவாதிகள் செலுத்தியுள்ளதால், மீதமுள்ள தொகையை வசூலிக்கும் நோக்கில் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின்படி ஏலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஏலம்விட திட்டமிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தயா குரூப் லிமிடெட், தயா அப்பரல் எக்ஸ்போர்ட்டர் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் என்பவையாகும். (எ-இ)





## புதினம் தெரியுமோ?

தாங்களும் நல்லது செய்யாமல், அடுத்தவையையும் அந்த நல்லதைச் செய்யவிடாமல் குழப்பிறவையை முந்தின ஆக்கள் 'வைக்கல் பட்டடை நாய்' எண்டு சொல்லுறவை. இப்ப அப்பிடி அடுத்தவை செய்யிற நல்லதுகளைக் குழப்பிறதுக் கெண்டே சிலர் வெளிக்கிட்டிருக்கினம். யாழ்ப்பாணத்தில கான்சர் யுனிட் இருக்கிற ஆஸ்பத்திரியில இப்பிடி நல்லது செய்யவெண்டு வெளிக்கிட்ட டொக்டரின்ர பேரைக் கெடுக்க சிலர் வெளிக்கிட்ட விசயத்தை போன வியாழக்கிழமை பட்சி சொல்லியிருந்தது. 'வருத்தக்காரருக்கு எண்டு வெளிநாட்டு ஆக்கள் அனுப்பிற காசை அந்த டொக்டர் தன்ர எக்கவுண்டுக்குப் போடச் சொல்லுறா. அப்பிடி அவான்ர எக்கவுண்டுக்கு வாற காசுக்கு ஒரு கணக்கு வழக்கும் இல்லை' எண்டமாதிரி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில எல்லாம் சேறடிச்சு விளையாடினவை.

ஆனால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் மூலமாத்தான் அந்தக் காசுவந்து, அவைதான் மருந்துகள், சத்துணவுகள், வேற மருத்துவப் பொருள்கள் எண்டு வாங்கிக்குடுக்கினம். இப்ப அந்த கான்சர் யுனிட்டுக்குப் பொறுப்பான டொக்டர், தன்ர எக்கவுண்டை ஓடிட் (கணக்காய்வு) செய்து உண்மை என்னெண்டு சனத்துக்கு வெளிப்படுத்தச் சொல்லி கடிதம் ஒண்டை ஆளுநருக்குக் குடுத்திருக்கிறா. மடியில கனமில்லாட்டி எந்தப் பயமுமில்லை எண்டதாலதான் அவா தன்ர எக்கவுண்டை ஆர் வேணுமெண்டாலும் 'ஓடிட்' செய்யலாமெண்டு சொல்லியிருக்கிறா. வெளிநாட்டிலபோய் வேலை செய்ய எவ்வளவோ சான்ஸ் கிடைச்சும் அதை உதறிப்போட்டு, எங்கட சனத்துக்குச் சேவை செய்ய வேணுமெண்டு நிண்ட அந்த டொக்டருக்கு இப்பிடியொரு அவப்பெயரை குடுக்கிறதுக்கு எப்பிடித்தான் மனம் வருகுதோ தெரியேலை. அதுவும் அவான்ர சேவையால அந்த ஆஸ்பத்திரிக்குத்தானே நல்ல பேர். ஆனால் அப்பிடி நல்லபேர் வாறது ஏன் அந்த ஆஸ் பத்திரிக்குப் பொறுப்பா இருக்கிற நேசமானவருக்குப் பிடிக் கேலை எண்டதும், அவாவுக்கு ஏன் சேறுபூசுறார் எண்டதும் விளங்காமல்தான் கிடக்கு.

இப்பிடி நல்லது செய்யிறவையை கேவலப்படுத்திறதில காட்டுற அக்கறையை கொஞ்சம் ஆஸ்பத்திரியிலையும் அந்த நேசமானவர் காட்டியிருந்தால், எவ்வளவோ நல்லது நடந்திருக்கும். ஆனால் அந்த ஆஸ்பத்திரியில நடக்கிற அநியாயங்களைக் கண்டும் காணாதது மாதிரி இருக்கிற அந்த நேசமான பொறுப்பானவர், நல்லது செய்யிறவையை மட்டும் ஏன் ஆஸ்பத்திரியை விட்டுக் கலைக்க நினைக்கிறார் எண்டதுதான் விளங்காமல் இருக்குது. கிட்டடியில அதே ஆஸ்பத்திரியில ஒரு டாக்குத்தர் ஒப்பிரேசன் ஒண்டைப் பிழையாச் செய்ததால ஒரு உயிர் அநியாயமாப் பறிபோனது. இந்த விசயத்தை வெளியில வரவிடாமல், ஒளிச்சு மறைச்சு, பிழையா ஒப்பிரேசன் செய்த டாக்குத்தரை இந்த நேசமான ஆஸ்பத்திரிப் பொறுப்பாளர் காப்பாத்திப்போட்டார். அப்பிடிப்பட்ட இந்த நேசமானவருக்கும் சப்போர்ட் பண்ண ஆக்கள் இருக்கினமெண்டால் நம்புவியளோ? போன சனிக்கிழமை எங்கட ஆசிரிய பீடத்துக்கு ஒரு பொம்பிளை டொக்டர் ஒராள் கோல் எடுத்து, கான்சர் யுனிட் டொக்டரை கேவலப்படுத்தியும், நேசமான பொறுப்பதிகாரியை நியாயப்படுத்தியும் கடும் லெக்சர் பண்ணிக்கொண்டே இருந்தா. இப்பிடி வேலிக்கு சாட்சியா வந்து கதைக்கிற ஓணான் ஆரா இருக்குமெண்டு 'செக்' பண்ணிப் பார்த்தால், அந்த நேசமானவரின் நேசத்துக்குரியவாதான் கோல் எடுத்த டொக்டர். அவா 'நான் பேப்பர்காரருக்கு பேசின பேச்சில இனிமேல் கான்சர் யுனிட் டொக்டருக்கு சப்போர்ட்டா செய்தி போடமாட்டினம்' எண்டு புளுகிக்கொண்டும் திரிஞ்சிருக்கிறா. உண்மை என்னெண்டால், ஆரும் ஆருக்கும் இஞ்ச சப்போர்ட் பண்ணேலை. எங்க நியாயம் இருக்கோ அதைச் சொல்லுறது உவைக்கு சப்போர்ட் பண்ணுறமாதிரி இருக்குப்போல. அநியாயம் செய்யிறவையை ஆதரிக்கிறவைக்கு, நல்லது செய்தால் அது பிழையாத்தான் படும். அம்மண ஊரில கோவணம் கட்டினவன் பைத்தியக்காரன் எண்டு எங்கட ஆக்கள் சும்மாவோ சொன்னவை?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2025/07
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents (Works specified in GROUP A in Table below) and Schedule (Section 5) for SBD 3 Documents (Works specified in GROUP B in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-06-17 To 2025-07-01 during 09:00 hrs and 15:00 hrs
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated intable below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given inthe Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-06-17 To 2025-07-01 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-06-24 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2025-07-02 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Security Amount (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Validity Period | Bid Validity Period (Days) |
| Group A | | | | | | | | |
| NP/14/41(13)/4/Council/DR /04/2025/23 | Package 01 * Construction Work of Head Office Building (Balance work) ,Vali east Pradeshiya Sabha | 21.19 | 84 | C6 or above (Building) | 5,000.00 | 212,000.00 | 15.10.2025 | 77 |
| Group B | | | | | | | | |
| NP/14/41(13)/4/Council /04/2025/24 | Package02 *Construction of Ramanathan Kaladdy veethy ,Kopay south, *Reconstruction of Maalai Vairavar 1 st lane ,Neervely | 6.99 | 84 | C8 or above (Highway) | 3,500.00 | 70,000.00 | 15.10.2025 | 77 |
| NP/14/41(13)/4/Council /04/2025/25 | Package03 *Improvement work of Seyakadu Hindu Cemetry,Neervely, *Construction of Interlock Paving at Samiththidal Hindu Cemetry , Idaikkadu | 1.20 | 63 | C9 or above (Building) | 1,000.00 | 12,000.00 | 17.09.2025 | 49 |

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur .**
**17/06/2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணைக் கடல் கொந்தளிப்பு

தற்போது நிலவும் வலுவான காற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் பண்ணைக் கடலில் நேற்றுமுன்தினம் கடல் அலைகள் கொந் தளிப்பான நிலையில் காணப்பட்டன. இதனை ஏராளமானோர் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். (ச-66)

**அல்வாய் மாலு சந்தி**
**ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்**

குறித்த ஆலயத்தில் நித்திய மற்றும் விசேட பூஜைகள் மற்றும் மகோற்சவ பெருவிழாக்களை மேற்கொள்வதற்கு பிராமண குருக்கள் தேவையாக உள்ளது. விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் மேலதிக விபரங்களை நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

ஆலய ஆதீனகர்த்தா

தொடர்புகளுக்கு:
**074 224 4271**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 . 01 . 1943



உதிர்வு 28 . 06 . 2024

**அமரர் தம்பையா தியாகராசா**
**திதி: 17.06.2025**

எமக்கு ஒளிவிளக்காய் ஒளியூட்டி உழைப்பிற்கோர்
உதாரணமாய் வாழ்ந்து அரவணைத்து
அன்பினால் எமையாண்டு அன்புடன் பண்பு சேர்த்து
எமை வளர்த்து அகிலத்தில் செழிப்புடன் வாழ எமக்கு
பல வழி காட்டி எம் உயர்ச்சிக்கு உந்துசக்தியாய்
அரிய பல அறிவுரைகள் நிதம் கூறி ஏர் பூட்டி உழவு செய்து
எளிமையாய் வாழ்வதன் பொருளுணர்த்தி
ஏற்றமுடன் நாம் வாழ வழிவகுத்த ஐயாவே
நீங்கள் எமை பிரிந்து ஆண்டொன்று கடந்தாலும்
அகலுமா உங்கள் பிரிவின் சோகம் மறையுமா உங்கள்
நினைவின் பாசம் என்றென்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்

மனைவி - புஸ்பராணி
மகன்மார் - மதனமோகன், பிரதீபன், ஜெயரூபன்
மகள்மார் - சுஜாத்தா, சியாமளா
மருமகள்மார் - சுதர்ஷினி, துளசி, கலையரசி
மருமகன்மார் - கரன், யசிகரன்
பேரப்பிள்ளைகள் - டிசாந், யதுசியன், சசித், சரண், சயன், அக்ஷயன், அஸ்ந்தியன், தூபிகா.

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 05 . 1957



இறப்பு 16 . 06 . 2025

**கமலநாதன் லோகராணி**

நீர்வேலி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலநாதன் லோகராணி அவர்கள் (16.06.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார் அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் அருட்குமரனின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற லோகநாயகி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் மல்லிகாதேவி, மயூரவதனி, சௌதாம்பிகை, ஸ்ரீகாந்தன் ருக்மணிதேவி, சோதிமலர், குமுதினி காலஞ்சென்ற வரதராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (17.06.2025) செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மேற்கு,**
**நீர்வேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

பெரும்பாலும் முதல் சிந்தனை
தெளிவற்றதாக இருக்கும்;
எதற்கும் மறுசிந்தனை செய்யுங்கள்.
– ஷேக்ஸ்பியர் –


## விஸ்வரூபமெடுக்கும் மருத்துவ நெருக்கடி !

இலங்கையில் மீண்டும் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள முதற்தர மருத்துவமனைகளில்கூட சில முக்கியமான மருந்துகள் இல்லாத நிலை நிலவுகின்றது என்று தெரிவித்துள்ளார் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ. எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ இரண்டு தினங்களுக்கு முன்னர் இதே சாரப்பட தனது கருத்தைப் பதிவுசெய்திருந்தார். ஆனால், அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் அவருடைய கூற்று அவ்வளவு பெரியளவில் கண்டுகொள்ளப்படவில்லை. தற்போது இலங்கையில் ஏற்படவுள்ள மருத்துவப் பெருநெருக்கடி தொடர்பில் துறைசார் மருத்துவர் எச்சரித்துள்ளமையானது இந்த விடயத்தில் கவனக் குவிவு ஏற்படக் காரணமாகியுள்ளது.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுள்ளது என்று கூறப்படுகின்றபோதிலும், பல்வேறு துறைகள் இன்னும் மீளமுடியாப் பின்னடைவை எதிர்கொண்டுள்ளமை வெளிப்படையான அவதானிப்பு. அதிலொன்றுதான் மருத்துவத்துறை. இலங்கையில் மருத்துவ நெருக்கடிகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன என்று சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் அரசாங்கத்துக்கு அண்மைக்காலமாக தொடர் எச்சரிக்கைகளை விடுத்துள்ளபோதும், அரசாங்கம் அது தொடர்பில் அக்கறை காட்டுவதுபோன்று தெரியவில்லை. இதன் தொடர்ச்சியாகவே, அரசாங்க மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் பல மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இது பேரழிவின் அறிகுறியாகும்.

'நாட்டில் நிலவும் மருந்துத்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன' என்று அரசாங்கமும், துறைசார் அமைச்சரும் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றபோதும், நிலைமைகளில் எந்த மாற்றமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. நிலைமை இன்னமும் மோசமடைந்திருக்கின்றது என்றே கருத வேண்டியிருக்கின்றது. பல அரசாங்க மருத்துவமனைகளில் இனிவரும் காலங்களில் சிகிச்சைகள் மற்றும் சத்திரசிகிச்சைகள் என்பனவும் மட்டுப்படுத்த வேண்டி ஏற்படலாம். தற்போதுள்ள நிலைமை தொடருமானால் நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு முழுமையாகவே முடங்கிவிடும் ஆபத்து இருக்கவே செய்கின்றது. இதன் விளைவுகள் முன்னெப்போதும் கண்டிராத வகையிலேயே இருக்கும்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம், காணி விடுவிப்பு, அரசியற்கைதிகளின் விடுதலை என ஏனைய விடயங்களில் செய்யும் இழுத்தடிப்பையும் கண்கட்டு வித்தைகளையும் அரசாங்கம் மருத்துவ விடயத்திலும் கைக்கொள்ளுமானால் நாடு மிகப்பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். மருந்துத்தட்டுப்பாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு விரைந்து மேற்கொள்ளவேண்டும். இல்லையேல் மக்கள் வீதிக்கு இறங்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.




## சிறைச்சாலை அதிகாரிகளின் சொத்து விவரங்கள் சோதனை



கொழும்பு, ஜுன் 17
சிறைச்சாலை அதிகாரிகள் அனைவரதும் சொத்து விவரங்கள் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவாலும், குற்றப் புலனாய்வு அதிகாரிகளாலும் சோதனைக்குள்ளாக்கப்படவுள்ளன. நீதிமன்ற அனுமதி பெற்று இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. இதே வேளை பாதாள உலகக்குழுக்களுடன் தொடர்புகளைப்பேணும் சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்பாகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதேநேரம், சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நீண்டகாலமாக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், அனைத்து அதிகாரிகளையும் இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால தெரிவித்துள்ளார். (எ-6)

## உபதபாலதிபர்களுக்கு நிரந்தர நியமனம்

கொழும்பு, ஜுன் 17
378 உபதபாலதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வெகுசன ஊடகத்துறை மற்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ முன்வைத்த பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதை அடுத்து இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.
உரியவகையில் நேர்முகப் பரீட்சைகளை நடத்தி இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. 378பேரும் ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர நியமனத்தைப் பெற்றுள்ளனர். (எ-6)

## ஜனாதிபதி நிதியச் சேவைகள் இணையத்தில் பதிவேற்றம்!

கொழும்பு, ஜுன் 17
ஜனாதிபதி நிதியத்தின் சகல சேவைகளையும் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் இணையத்தில் பார்வையிட முடியும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதிக்கு முன்பாக ஜனாதிபதி நிதியத்துக்கு உதவிகோரி அனுப்பப்பட்ட விண்ண ணப்பங்கள் தொடர்பான செயற்பாடுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்களின் பெறுபேறுகளை ஜனாதிபதி நிதியத்தின் இணையத்தில் பார்வையிடலாம் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பப்பட்ட மருத்துவ உதவி, விசேட தேவையுடையோருக்கான உதவி, ஜனாதிபதி புலமைப்பரிசில்கள், பொருளாதாரரீதியாக நலிவுற்றோரின் விண்ணப்பங்கள், கல்வி ரீதியாக சாதித்தவர்களுக்கான கொடுப்பனவுகள், யானைகளின் தாக்குதலுக்கு இலக்கானோர், தேசிய ரீதியில் சாதனைபடைத்தவர்கள், இடர்காலக் கொடுப்பனவுகள் போன்ற. சகல விபரங்களையும் ஜனாதிபதி நிதியத்தின் இணையதளத்தில் பார்வையிடமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## 18,000 மெற்றிக்தொன் உப்பு இறக்குமதி

கொழும்பு, ஜுன் 17
கடந்த மே மாதம் 22ஆம் திகதிக்கும், கடந்த 7ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 18 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஆயிரத்து 291 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதேவேளை, 30 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பு சந்தைக்கு விடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-6)



### முன்னாள் ஜனாதிபதிகளின்
## சலுகைகளை நிறுத்துவதில் அரசாங்கத்துக்குச் சிக்கல்

கொழும்பு, ஜுன் 17
முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் மற்றும் சலுகைகளை இரத்துச்செய்வது என்ற தீர்மானத்திலிருந்து அரசாங்கம் பின்வாங்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் மற்றும் சலுகைகளை அதிகரிக்கமுடியும், ஆயினும் குறைக்கமுடியாது என அரசியலமைப்பின் 36 (4) பிரிவு கூறுகிறது. அதனாலேயே முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் மற்றும் சலுகைகளை குறைக்கமுடியாதநிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-6)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரு மாதங்களின் பின்னரே வாகன இலக்கத்தகடுகள்!

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தகவல்

கொழும்பு, ஜுன் 17

**புதிய வாகன உரிமையாளர்களுக்கு இலக்கத்தகடுகளை வழங்குவதில் இரண்டு மாத கால தாமதம் ஏற்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. புதிய விநியோகத்தரிடம் இலக்கத் தகடுகளுக்கான கொள்முதல் கோரிக்கையை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் சமர்ப்பித்துள்ளதால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது.**

இரண்டு மாதங்களுக்குள் இந்த செயல்முறை நிறைவடையும். அதன்பின்னர் இலக்கத்தகடு வழங்கல் மீண்டும் ஆரம்பிக்கும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அதுவரை, புதிய வாகன உரிமையாளர்களின் பதிவு விவரங்களை உறுதிப்படுத்தும் அச்சிடப்பட்ட காகித எண்தகடுகள் மற்றும் கடிதத்தை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வழங்கும். இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



# போதையில் தகராறு; இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜுன் 17

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுபான சாலையொன்றில் குழப்பம் விளைவித்து, தகராறில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மது அருந்திக் கொண்டிருந்த இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தர்க்கம், கைகலப்பாக மாறியுள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரைக் கைது செய்து நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 20ஆம் திகதிரை விளக்கமறியலில் வைக்க யாழ்பபாணம் நீதவான் நீதிமன்றப் பதில் நீதவான் உத்தரவிட்டார். (எ-26)




# உடைமையில் ஐஸ்; இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 17

ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் தனங்கிளப்பில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனங்கிளப்புப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இருவரை சாவகச்சேரி போதைத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 12 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், பொம்மைவெளியைச் சேர்ந்தவர்கள் என்றும், 22 மற்றும் 28 வயதுடையவர்கள் என்றும் தெரிவித்த பொலிஸார், அவர்கள் இருவரும் போதைக்கு அடிமையானவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)



சாவகச்சேரி நகரசபை வேலைத்திட்டங்கள்

# பொதுமக்களை உள்ளடக்கிய கண்காணிப்புக்குழு அவசியம்

## உபதவிசாளர் கிஷோர் வலியுறுத்து

சாவகச்சேரி, ஜுன் 17

பொது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது வட்டார ரீதியாக பொதுமக்களை உள்ளடக்கிய கண்காணிப்புக்குழு அமைக்கவேண்டும் என்று சாவகச்சேரி நகர உபதவிசாளர் ஞா.கிஷோர் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வீதிஅபிவிருத்தித்திணைக்களத்தினால் மீசாலை அல்லாரை வீதி புனரமைக்கப்பட்டுவருகின்றது.

இந்த வீதியின் புனரமைப்பின் தரம் தொடர்பிலும் புனரமைப்பின்போது பின்பற்றப்படுகின்ற நடைமுறை தொடர்பிலும் பொதுமக்களால் பல்வேறுவிமர்சனங்கள்முன்வைக்கப்பட்ட நிலையில் குறித்த இடத்துக்குச்சென்ற அவர் புனரமைப்புப்பணிகளை பார்வையிட்டதோடு பொதுமக்களோடும் கலந்துரையாடினர். இதன்போது வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரோடு கலந்துரையாடி அப்பகுதி மக்களை உள்ளடக்கிய கண்காணிப்புக் குழு ஒன்றினை உருவாக்கிய பின்னர் வீதிப் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்குமாறுவேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்றுக்கொண்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கண்காணிப்புக்குழு அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்தனர். (ச-28)

# உடைமையில் ஹெரோய்ன் இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜுன் 17

ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதைத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் இருந்து 40 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டநிலையில், சந்தேகநபரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-26)

# கஞ்சா வைத்திருந்த இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 17

250 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 24 வயது இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் பலாலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் பலாலிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-26)

# சிவநகர் பாடசாலையின் வைரவிழாக் கொண்டாட்டம்



கிளிநொச்சி, ஜீன் 17

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வைரவிழா பாடசாலையின் முதல்வர் சிவதர்சினி கிருசாந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ம.பற்றிக்டிறஞ்சன் பங்கேற்றார்.

நிகழ்வில் ஏனைய பாடசாலைகளின் முதல்வர்கள், ஆசிரியர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-41-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்றுபுதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான காரியங்களிலும் கூடுதல் கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே வீண்வாக்குவாதம் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் தேவை களைப் பூர்த்திசெய்து மகிழ்ச்சி அடைவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவிகேட்டு நச்சரிப்பார்கள். கொடுத்த கடனில் ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த சுபச்செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். அலுவலகப்பணிகளில் மிகவும் கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். முக்கியமான விஷயம் தொடர்பாக வாழ்க்கைத் துணையிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கன்னி:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். அதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும்.

**துலாம்:** இன்று தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**விருச்சிகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்துவிடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும். வீட்டில் தொலைந்த பொருள் திரும்பக்கிடைக்கும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர்ச்செலவுகளால் கடன் வாங்கநேரிடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை விட்டுப்பிடிப்பது செல்வது நல்லது. சிலருக்கு வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்வீர்கள். பிற்பகலுக்குமேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு புதிய டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும்வாய்ப்பும் சிலருக்கு ஏற்படக்கூடும். பயணத்தின்போது கொண்டு செல்லும் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.

# தீ விபத்தில் கடைகள் நாசம்

முல்லைத்தீவு, ஜூன் 17

**முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனைக்கு முன்பாக உள்ள கடைத்தொகுதியில் நேற்றுக்காலை தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தீ, அருகில் உள்ள பாதணிக்கடைக்கும் பரவியுள்ளது.**



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை, கடற்படையினர், இராணுவத்தினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோதும் உணவகமும், பாதணிக்கடையும் முற்றாக அழிந்ததுடன், அருகில் இருந்த இரு கடைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்புப் படைப்பிரிவு இல்லாமையால் கிளிநொச்சி மாவட்டத்தின் உதவியை மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு நாடியிருந்தது. இருப்பினும் தீப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து கிளிநொச்சி மாவட்ட தீயணைப்புப் படைப்பிரிவின் உதவிக்கோரிக்கை இடைநிறுத்தப்பட்டது. (எ-19)

## தீ விபத்து, விலங்குக்கடியால் ஆறு பேர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு தீ விபத்து மற்றும் விலங்குக்கடியால் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சி.டி. திலக்தனபால தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மே மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொலிஸ் நிலையங்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் இருவர் தீ விபத்திலும், நால்வர் விலங்குக்கடியாலும் உயிரிழந்துள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-125)

கடைத்தொகுதியில் தீ

## சம்பவ இடத்துக்குச் சென்று ரவிகரன் எம்.பி. ஆராய்வு

முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனைக்கு முன்பாக உள்ள கடைத்தொகுதியில் நேற்றுக்காலை தீ விபத்து ஏற்பட்டிருந்தநிலையில், சம்பவ இடத்துக்குச்சென்று நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் நிலைமைகளை ஆராய்ந்தார். பாதிக்கப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்களுடனும் கலந்துரையாடியதுடன், நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்புப் பிரிவொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் தம்மால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (எ-இ)



## மாடு அறுக்கும் நிலையம் 'சீல்' வைக்கப்பட்டுப் பூட்டு

மன்னார், ஜூன் 17

மன்னார் நகரசபை எல்லைக்குள் உள்ள மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்களுக்கான மாடு வெட்டும் நிலையத்துக்கு மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனையால் "சீல்" வைக்கப்பட்டுள்ளது. மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அதிகாரிகளுக்குக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் மன்னார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையில், மாடு அறுக்கும் நிலையம் பல ஆண்டுகளாக சுகாதார நடைமுறைகளுக்கும், அரச அறிவுறுத்தல்களுக்கும் அமைய இயங்கவில்லை என்பது கண்டறியப்பட்டது. பல்வேறு குறைபாடுகள் கண்டறியப்பட்டதை அடுத்து, மாடு அறுக்கும் நிலையம் "சீல்" வைத்து மூடப்பட்டுள்ளது. (எ-56)

### தவறான முடிவெடுத்து

## ஐந்து மாதங்களில் 127 பேர் உயிரிழப்பு

இந்த ஆண்டின் மே மாதம் 31ஆம் திகதிவரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் 127 பேர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளனர் என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்மூலம் கோரப்பட்டமைக்கு அமைய இந்தத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஐந்து மாத காலப்பகுதியில் பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய இந்தத் தரவு வழங்கப்பட்டுள்ளது. (எ-125)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 17

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடத்தப்படும் நிகழ்வில் பரஞ்சோதி முனிவர் குருபூசையைத் தொடர்ந்து, மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க.கயிலைவாசனின் "உக்கிர குமாரனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்" எனும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

★★★★★★

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடர் சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறும் நிகழ்வில், கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச்சொற்பொழிவை 'திருச்செந்திப் படலம்' எனும் விடயப்பொருளில் இளஞ்சைவப்புலவர், பிரசங்க வாரிதி ச. நவநீதனும் வழங்கவுள்ளனர்.

சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததான விழிப்புணர்வு பரவலாக்கப்படவேண்டும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 17**

**எதிர்காலத்தில் இரத்ததானம் செய்பவர்கள் அதிகரிக்கும் வகையில் சிறந்த விழிப்புணர்வு முறைமையை செயற்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. பாடசாலை முறைமையினுள்ளும் இரத்ததானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த அதிக வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**


உலக இரத்ததானம் செய்பவர்கள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி அலரிமாளிகையில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் பங்கேற்புடன் நடைபெற்றது. இதில் இரத்ததானம் செய்பவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் வருடாந்த இரத்தத் தேவையில் சுமார் 85% நடமாடும் இரத்ததான முகாம் ஏற்பாட்டாளர்களினால் செய்யப்படும் ஒப்பற்ற பங்களிப்பாகும். தேசிய இரத்த மாற்ற சேவைக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் 450,000 இரத்த அலகுகளில், 380,000க்கும் மேற்பட்டவை அல்லது சுமார் 85% இந்த நடமாடும் முகாம்களிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. இந்த நோக்கத்திற்காக ஆண்டுதோறும் சுமார் 5,000 நடமாடும் இரத்ததான முகாம்கள் ஏற்பாடுசெய்யப்படுகின்றன.

அரச நிறுவனங்களுக்கு இரத்ததானம் செய்வதற்காக வருடத்திற்கு ஒரு நாளை ஒதுக்கும் திட்டத்தை எதிர்காலத்தில் ஒரு முறையான திட்டத்துடன் மீண்டும் செயற்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது. பாடசாலை முறைமையினுள்ளும் இரத்ததானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த அதிக வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் - என்றார். (ச-26)



# இணைந்து பயணிக்க தமிழரசு முன்வரட்டும்

## ஆனந்தசங்கரி அழைப்பு

கிளிநொச்சி, ஜூன் 17

தமிழரசுக்கட்சியினர் மீண்டும் எம்முடன் இணைந்து பயணிக்கவேண்டும். சுமந்திரனுக்கு இந்த அழைப்பை நான் விடுக்கின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியில் மீண்டும் இணைவதன்மூலம் நன்மையான விடயங்களைப் பெறமுடியும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசியலமைப்பு முறையிலான தீர்வையே நான் வலியுறுத்திவருகின்றேன். சிங்கள, இஸ்லாமிய மக்களும் அதனை வரவேற்றனர். அந்தத் தீர்வுத்திட்டத்துக்காக நாம் தொடர்ந்தும் முயற்சித்து வெற்றிபெறமுடியும். அதற்கான காலம் மீண்டும் உருவாகியுள்ளது. அதனை உணர்ந்து செயற்படவேண்டும்.

இன்று பதவிக்காக அலைகின்றனர். பதவிகளுக்காக கூட்டுச்சேருகின்றனர். நான் பதவிக்கு ஆசைப்பட்டதில்லை. இன்றைய அரசியல் சூழலைக் கருத்திற்கொண்டு அனைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து செயற்பட முன்வரவேணடும்- என்றார். (ச-113)

# வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜூன் 17

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் வீடொன்றின்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ள னர்.

இந்தச் சம்பவம் களுபோவில, டெம்பிள் வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயமோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
16.05.1950

மறைவு
15.01.2025

**வைத்திய கலாநிதி**

## தில்லையம்பலம் ஆனந்தமூர்த்தி

**(ஓய்வுபெற்ற பல் வைத்திய சிரேஸ்ட விரிவுரையாளர் பேராதனை பல்கலைக் கழகம்)**

1993 - 2015 காலப்பகுதியில் பல் மருத்துவ பீட பல் பொருத்து அறுவை சிகிச்சைத் துறை விரிவுரையாளராக இருந்த வைத்திய கலாநிதி தில்லையம்பலம் ஆனந்தமூர்த்தி அவர்கள் கடந்த (15.01.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**
**பல் வைத்திய நிபுணர்கள் மற்றும் விசேட பல்வைத்திய நிபுணர்கள்,**
**இலங்கை பல்வைத்திய சங்கம் வடக்கு மாகாணக்கிளை**

(CS/58602) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு போஷாக்கு
# நாளைய கரிசனை

எமது பாற்பண்ணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும்
எமது வளமான புல்நிலங்களின் நலனைக் கொண்ட
செழுமைமிகு பசும்பாலுடன், நவீன தொழில்நுட்பமும்
சூழலுக்கு சாதகமான நிலைத்திருக்கும் உற்பத்தி செயன்முறையும் கலந்து.
நாட்டுக்கு போஷாக்கை வழங்குவதும் நாளைய கரிசனையை கொண்டதுமான கொத்மலே.



A QUALITY Cargills PRODUCT

Kotmale

நம் நாட்டின் போஷாக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
04 . 04 . 1935



இறப்பு
15 . 06 . 2025

**மூத்ததம்பி ஆனந்தகிருஷ்ணன்**
**(முன்னாள் பொது முகாமையாளர் வலி கிழக்கு வடபகுதி ப.நோ.கூ சங்கம்-அச்சுவேலி சமாதான நீதவான்)**

யாழ் ஆவரங்காலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மூத்ததம்பி ஆனந்தகிருஷ்ணன் அவர்கள் கடந்த (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி-மூத்தபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுந்தரேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆனந்தகௌரி (சுவிஸ்). கௌசலா (தேனா-ஆசிரியர் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி). சுதர்சினி (ஜேர்மனி) காலஞ்சென்ற தணிகைக்குமரன் (லண்டன்). கமலக்குமரன் (ஆசிரியர்-கிளி/பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னையா. அன்னம்மா மற்றும் சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசலட்சுமி. காலஞ்சென்றவர்களான நடராசா. பொன்னத்துரை. பரமேஸ்வரி. புவனேஸ்வரி மற்றும் பாலசரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திவாகரன் (சுவிஸ்). காந்தீபன் (தொழிநுட்ப உத்தியோகத்தர்-பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்-யாழ்ப்பாணம்). சிவலிங்கம் (ஜேர்மனி). சிந்து (லண்டன்). லக்ஸ்சிகா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மாநகரசபை- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆகாஷ். அஸ்மிதா. ஆஷிகா. ஆர்த்திகா. அக்ஷிகா. நிதுன். நிகிஷா. அபினாஸ். அப்சரன். ஆருக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (18.06.2025) புதன்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கரதடி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 619 7660**
**070 679 7901**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## பருத்தித்துறை பிரதேச...

பருத்தித்துறை பிரதேசசபையின் முதலாவது அமர்வு உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமையில் இன்று காலை 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

20 ஆசனங்களைக் கொண்ட இந்த சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 9 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 4 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 4 ஆசனங்களும், சுயேச்சைகளுக்கு இரண்டு ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு ஓர் ஆசனமும் கிடைத்துள்ளன.

இதில் தேசிய மக்கள் சக்தி நடுநிலைமை என்ற நிலைப்பாட்டை எடுத்தால், வேறு எந்தவொரு தரப்பின் ஆதரவும் இல்லாமல் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கமுடியும். (அ-ம-26)

## ஹெரோய்னுடன்...

துள்ளனர். 42 மற்றும் 22 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருவரிடம் இருந்தும் தலா 10 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட் டுள்ளது. அவர்களுக்கு எதிரான சட்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-125)

போதைப்பொருளை வைத்திருந்த

# 3 இளைஞர்களுக்கு தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருள், 5 கிராம் கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர்களுக்கு நீதிமன்றம் தண்டம் விதித்துள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஏ.எஸ்.ராமநாயக்க, சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கெலும் சிறிமால் ஆகியோரின் தலைமையின் கீழ் செயற்படும் குழுவினரால் இந்தக் கைது நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது. (அ-ம-26-125)

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 07 . 1942



மறைவு
16 . 06 . 2025

**செபஸ்ரியாம்பிள்ளை செபமாலை (பொன்னுத்துரை)**

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை செபமாலை (பொன்னுத்துரை) அவர்கள் நேற்று (16.06.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மகனும், சூசைப்பிள்ளை, யேசுதாசன், மணி, ராசமலர், தவநேசன், ஞானசீலன், மாலா, சுரேஷ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், மேரிதியடோசியா, மேரிசகாயராணி, மேரியசிந்தா, இம்மானுவேல் ரட்ணராஜ், ரெஜிஸ்ரஞ்சிதராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மரியதாஸ், அன்ரனி பெர்னாண்டோ, விஜயகுமார், அருந்தவமலர், நிமலா ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்ரன் ராஜ் தர்ஷிகா, நிஷானா, சம்சன்ரசான் றொசாறி, மகிழ்ராஜ் றொசிந், றொக்ஷியா, கௌசியா, வினுசியா, டிலக்ஷி, டிலானி, சவித்திரன், தக்ஷிக்கேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், ஏற்றியன், அமிலியா, தெபோரா, பியூலா, ஆரூத் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.06.2025) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி நடைபெற்று காக்கைதீவு புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 652 1265**

**4ம் கட்டை,**
**மானிப்பாய்.**

(CS/58598) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 01 . 1949



மறைவு
14 . 06 . 2025

**சின்னத்துரை யோகராஜா (ராசா)**

கொக்குவில் மேற்கு சொர்ணவடலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை யோகராஜா (ராசா) அவர்கள் கடந்த 14.06.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மதியாபரணம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சோமாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜெயரூபன் (ரூபன், டென்மார்க்), மற்றும் காண்டீபன் (தீபன், ஜேர்மன்), சைலஜா (சைலா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பாலரத்தினம் மற்றும் யோகம்மா (கனடா), தங்கராசா (கொக்குவில்), காலஞ்சென்ற ரத்னசிங்கம் மற்றும் யோகரத்தினம் (கனடா), புஸ்பரத்தினம் (தேவி,கனடா), விமலாதேவி (குஞ்சுமணி, கொழும்பு), கமலாதேவி (ஜேர்மன்), விஸ்வரத்தினம் (குஞ்சன், இந்தியா), நகுலேஸ்வரன் (அப்பு, ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், புனிதா, வேணுஜா, ரமேஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலேஸ், ஹரிஷா, ஜெனார்த், ஷெரின், டன்சிகா, வின்சன், கவிப்ரியா, டிலக்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 18.06.2025 புதன்கிழமை காலை 09.00 மணியளவில் மானிப்பாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
நகுலேஸ்வரன் தம்பி (அப்பு) - ஜேர்மனி : +4915738965289
[illegible] : 076 367 3624
மகன் (தீபன்) - ஜேர்மனி : +4915151111127

**தகவல்:**
**நகுலேஸ்வரன்**
**(அப்பு தம்பி, ஜேர்மனி)**

(CS 5860) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை...

றது. உள்ளூராட்சித் தேர்தலில் எந்தத் தரப்புக்கும் பெரும்பான்மை கிடைக்காத சபைகளில், உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாவுவின் மேற்பார்வையில், ஆட்சி அமைக்கப்பட்டுவருகின்றது.

இதன்படி பருத்தித்துறை நகரசபையில் அமர்வு இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஒட்டுமொத்தமாக 15 ஆசனங்களைக் கொண்ட பருத்தித்துறை நகரசபையில், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 5 ஆசனங்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 4 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 2 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 2 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு ஓர் ஆசனமும், சுயேச்சைக்கு (ஊசி) ஓர் ஆசனமும் கிடைத்துள்ளன.

இவற்றில் தேசிய மக்கள் சக்தி பெரும்பாலும் இன்று நடுநிலை வகிக்கும் என்றே கருதப்படுகின்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசியப் பேரவைக்கும், ஈ.பி.டி.பி., இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் 7:5 என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியப் பேரவை முன்னிலை வகிக்கும். சுயேச்சைக் குழுவின் வாக்கு தீர்மானிக்கும் சக்தியாக அமைய வாய்ப்பில்லை. சிலவேளைகளில், நடுநிலை வகிக்கும் தனது முன்னைய முடிவுகளை தேசிய மக்கள் சக்தி மறுபரிசீலனை செய்தால், சுயேச்சைக் குழுவான ஊசி தீர்மானிக்கும் சக்தியாக மாறுவதற்கு வாய்ப்புகளும் உள்ளன. (அ-ம-26)

## கரவெட்டிப்...

கரவெட்டிப் பிரதேசசபையின் முதலாவது அமர்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

32 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 13 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 7 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 6 ஆசனங்களும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 4 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு 2 ஆசனங்களும் கிடைத்துள்ளன. இந்தச் சபையில் தமிழரசுக் கட்சியை வீழ்த்துவதற்கான கூட்டணியொன்றுக்கான இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை. ஆதலால், இலங்கைத் தமிழரசுக் கட்சியே ஆட்சியமைக்கும் என்று கருதப்படுகின்றது. (அ-ம-26)

## வவுனியா...

பட்டனர். வவுனியா மாநகரசபை அமர்வு, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று இடம்பெற்றன.

21 உறுப்பினர்களைக்கொண்ட இந்த சபையில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் சுந்தரலிங்கம் காண்டீபனும், தேசியமக்கள் சக்தியின் சார்பில் அதன் உறுப்பினர் சிவசோதி சிவசங்கரும் முன்மொழியப்பட்டனர்.

சு.காண்டீபனுக்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நான்கு உறுப்பினர்களும், தமிழரசுக் கட்சியின் மூன்று உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு உறுப்பினர்களும், ஜனநாயகத் தேசிய கூட்டணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலா ஒரு உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர். அவர் 11 வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சி.சிவசங்கருக்கு தேசிய மக்கள் சக்தியின் நான்கு உறுப்பினர்களும், இலங்கைத் தொழிலாளர் கட்சியின் நான்கு உறுப்பினர்களும், இரு சுயேச்சை உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர். இதன்படி, அவர் 10 வாக்குகளைப் பெற்றார். முடிவில் 11:10 என்ற அடிப்படையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆட்சியமைத்துள்ளது. (அ-ம-110-18)

## தீவகத்தின்...

களை மேற்கொள்வோம் என மேற்குறித்த மூன்று சபைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தீவகத்தின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும், கட்சியின் தீவகத் தொகுதிக் கிளை உறுப்பினர்களும், தொகுதிக் கிளைத் தலைவர் மாணிக்கவாசகர் இளம்பிறையன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதற்காகவும், அந்தப் போராட்டத்துக்கு எதிராகவும் வலிந்து செயற்பட்டவர்கள்தான் ஈ.பி.டி.பி.யினரும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும். அவர்கள் தீவக மக்கள் மீது மேற்கொண்ட அராஜகங்களை மறந்து, தவிசாளர் உப தவிசாளர் பதவிகளுக்காக அவர்களோடு இணையமுற்பட்டால் மக்களுக்கும் எமக்கும் இடையிலான இடைவெளிகள் அதிகரிக்கும் என்று தீவகத்திலிருந்து உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவாகியுள்ள தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## கொழும்பு...

விராய் கெலி பல்தாரும், பிரதி மேயராக ஹேமந்த குமாரவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் கொழும்பு மாநகரசபையில் எந்தவொரு கட்சியும், சுயேச்சைக்குழுவும் ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப்பெரும்பான்மை பலத்தைப் பெறவில்லை. எனவே, சபையை அமைப்பதற்குரிய கன்னி அமர்வு மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது மேயர் வேட்பாளர் பதவிக்கு விராய் கெலி பல்தசாரின் பெயரை தேசிய மக்கள் சக்தி முன்மொழிந்தது. மொஹமட் ரிஷாவின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழிந்தது.

இதன்போது பகிரங்க வாக்கெடுப்பை நடத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணியும், இரகசிய வாக்கெடுப்பை நடத்துமாறு தேசிய மக்கள் சக்தியும் உள்ளூராட்சிமன்ற ஆணையாளரிடம் கோரின. இது தொடர்பில் சபையில் கடும் வாக்குவாதமும், கூச்சல், குழப்பமும் ஏற்பட்டது. இறுதியில் இரகசிய வாக்கெடுப்பு எனத் தீர்மானிக்கப்பட்டது.

மொத்தம் 117 உறுப்பினர்கள் வாக்களித்தனர். 2 வாக்குகள் நிராகரிக்கப்பட்டு, 115 வாக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இரகசிய வாக்கெடுப்பின்போது விராய் கெலி பல்தசாருக்கு 61 வாக்குகளும், ரிஷா சருக்கிற்கு 54 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. இதைத் தொடர்ந்து கொழும்பு மாநகரில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்ததாக அறிவிக்கப்பட்டது. பிரதி மேயராக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஹேமந்தகுமார ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-44)

## ஓட்டோ...

தைச் சேர்ந்த பர்ணாந்து சகாயதேவதாஸ் (வயது-59) என்பவரே உயிரிழந்தவராவார்.

நெடுந்தீவு பிரதான வீதியில் இலங்கை வங்கிக் கிளைக்கு அருகே நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வீதியைக் கடக்க முயன்றவரை முச்சக்கர வண்டி மோதி விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த நபர் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஓட்டோவின் சாரதி நெடுந்தீவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். மரண விசாரணைகளை தீவக திடீர் மரண விசாரணை அதிகாரி நா.தியாகராசா மேற்கொண்டார். (அ-ம-26)

## 50 கிராம்...

சுன்னாகம் - கந்தரோடைப் பகுதியில் வைத்தே அந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதான சந்தேகநபர் அளவெட்டி பகுதியைச் சேர்ந்தவர்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஏ.எஸ்.ராமநாயக்க, சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கெலும் சிறிமால் ஆகியோரின் தலைமையின் கீழ் செயற்படும் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை நடத்துமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26-125)

## தெற்கு...

தேவந்தினி பாவுவின் தலைமையில் பிரதேசபை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் சுதர்சன சாமர வீரக்கோன், மற்றும் சுயேச்சைக் குழு சார்பில் கசுன் சுமதிபால ஆகியோரின் பெயர்கள் தவிசாளர் தெரிவுக்கு முன்மொழியப்பட்டன. இதில் 12:05 என்ற அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்று ஆட்சியமைத்தது. (அ-ம-110)

## படையினரின்...

காணி விடுவிப்புக்காக 15 மில்லியன் ரூபா அரச நிதி செலவு செய்யப்பட்டு அந்தக் காணிகள் துப்புரவாக்கப்பட்டுள்ள நிலையில், அங்குள்ள பாதுகாப்பு வேலியை அகற்ற இராணுவத்தினர் 18 மில்லியன் ரூபா தேவை எனத் தெரிவித்து காணிகளை விடுவிக்க மறுத்து வருகின்றனர். அதனால் அந்தக் காணிகள் மீண்டும் பற்றைக்காடுகளாக மாற ஆரம்பித்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவிவகித்தபோது கடந்த ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி ஒட்டகப்புலத்தில் நடந்த நிகழ்வில் 'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் பலாலி வடக்கு ஜே/254, பலாலி கிழக்கு ஜே/253, பலாலி தெற்கு ஜே/252, வயாவிளான் கிழக்கு ஜே/244, வயாவிளான் மேற்கு ஜே/245 கிராம அலுவலர் பிரிவுகளில் 234.83 ஏக்கர் காணி விவசாய நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டது. அவை 408 பேருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

காணிகளை விடுவிப்பதற்காக அவை 15 மில்லியன் ரூபா அரச நிதி செலவிடப்பட்டு துப்புரவாக்கப்பட்டன. ஆயினும் காணிகள் விடுவிக்கப்பட்டுத் தற்போது 15 மாதங்கள் கடந்துள்ளபோதும், அவை இன்னமும் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளன. மக்கள் அந்தக் காணிகளை முழுமையாகப் பயன்படுத்தவேண்டுமானால், அங்குள்ள பாதுகாப்பு வேலி அகற்றப்படவேண்டும். ஆயினும் அங்குள்ள பாதுகாப்பு வேலியை அகற்றிப் பின்னநகர்த்துவதற்கு 18 மில்லியன் ரூபா தேவை என்று தெரிவித்து இழுத்தடித்துவருகின்றனர்.

இந்தப் பாதுகாப்புவேலி அகற்றப்படாமையால் அந்தக் காணிகளைப் பயன்படுத்துவதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அந்தக் காணிகளுக்கு நீண்டதூரம் சுற்றிச் செல்லவேண்டியுள்ளது என்றும், மாலை 6 மணிக்குப் பின்னர் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதேநேரம் தற்காலிகக் கொட்டகைகள் அமைப்பதற்கு மட்டுமே இராணுவத்தினர் அனுமதிக்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். 15 மில்லியன் ரூபா அரச நிதிச் செலவில் அந்தக் காணிகள் துப்புரவாக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மீண்டும் அந்தக் காணிகள் பற்றைக்காடுகளாக மாறும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியபோது, இராணுவத்தின் இந்த விடயத்தில் சரியாகப் பதில் கூறாது மழுப்பியிருந்தனர். இந்தக் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-எ-26)

## இராமநாதபுரத்தில்...

வர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சில தினங்களுக்கு முன்னரே அவர் உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-113)

## யாழில்...

யான தகவலின் அடிப்படையிலேயே இந்தச் செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் காரணமாகவே எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்பால் இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும், நாட்டில் போதியளவு எரி பொருள்கள் இருப்பில் உள்ளன என்றும், தேவையற்ற வகையில் செயற்கையான தட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டாம் என்று யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ம-26-125-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளிடம் சி.ஐ.டி.யினர் நேற்றுத் தீவிர விசாரணை!

திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி செபஸ்டியன் தேவியின் வீட்டுக்குச் சென்ற சி.ஐ.டி. அதிகாரிகள் நேற்று மூன்று மணிநேரம் அவரிடம் விசாரணைகளை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அமைப்புக்களுடன் அவர்களுக்கு இருக்கும் தொடர்பு மற்றும் எதிர்காலப் போராட்டத் திட்டங்கள் தொடர்பிலேயே விசாரணை நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. (ம-125)

## கட்டாக்காலிகளால் விவசாயம் பாதிப்பு

*சண்டிலிப்பாய் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஜூன் 17

கட்டாக்காலிக் கால்நடைகள் மற்றும் வளர்ப்பு மாடுகளால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என்று சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

வழுக்கையாறு வெளியை அண்மித்து மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகள் வளர்ப்பு மாடுகளாலும், கட்டக்காலி கால்நடைகளாலும் பாதிக்கப்படுகின்றன. கமக்கார அமைப்புகளும் நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை. மாடுகளை மானிப்பாய் பொலிஸாரிடம் பாரப்படுத்தினாலும், அவை அன்று மாலையே விடுவிக்கப்படுகின்றன. சிலரின் மாடுகளைப் பிடிக்கமுடியவில்லை என்று விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலர், வழுக்கையாறுப் பிரதேசத்தில் சங்கானைப் பிரதேச செயலகத்துக்குட்பட்டவர்களும் அத்துமீறி மாடுகளை மேய்ச்சலுக்கு விடுகின்றனர். அவர்களின் பிரதேச விவசாயக் குழுவுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், கமக்கார அமைப்பு சிறப்பாகச் செயற்படப் பொலிஸார் ஆதரவு வழங்கவேண்டும். குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அதன்பின்னர் இறுக்கமான நடவடிக்கை முன்னெடுக்கவேண்டி ஏற்படும் - என்றார். (எ-125)



## பிளாஸ்ரிக் துகள்களை அகற்ற பொதுமக்களின் உதவி கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணத்தில் கரையொதுங்கும் பிளாஸ்ரிக் மூலப்பொருள் அடங்கிய துகள்களை அகற்றுவதற்கு பொதுமக்களின் உதவி பெறப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பிளாஸ்ரிக் துகள்கள் பரவலாகக் கரையொதுங்கியுள்ளன. இவை தொடர்ச்சியாகக் கரையொதுங்குகின்றனவா என்பதை ஆராய்ந்து அகற்றுவதற்கு கடல் சூழல் சார் பாதுகாப்பு அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் துகள்களை அகற்றும் பணிகளுக்காக இதுவரை கடற்படையின் உதவி பெறப்பட்ட நிலையில், இனிவரும் நாள்களில் அந்தப் பணிகளுக்காக பொதுமக்களின் உதவி கோரப்படவுள்ளது - என்றார். (ம-125)

# கோப்பாய் கொலைச் சம்பவம் சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவரை வாளால் வெட்டிப் படுகொலைசெய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்திருந்தது. வாள்வெட்டுக்கு இலக்கான ச.துஷ்யந்தன் (வயது-43) என்ற குடும்பத் தலைவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் 25 மற்றும் 26 வயதுடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர். சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோது, சந்தேகநபர்களை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பதில் நீதவான் உத்தரவிட்டதுடன், அடையாள அணிவகுப்பு நடத்தவும் உத்தரவிட்டார். (எ-26)

**Room வாடகைக்கு**
நல்லூர் கோவிலுக்கு அருகாமையில் Room வாடகைக்கு உண்டு.
மாணவிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 076 787 0837

**வேலையாட்கள் தேவை**
கட்டட வேலைக்கு அனுபவமுள்ள வயறிங், மேசன், கூலி வேலையாட்கள் தேவை.
076 230 6081

**பண வசூலிப்பாளர் தேவை**
யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு
பண வசூலிப்பாளர் தேவை.
தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 18.06.2025 புதன்கிழமை மு.ப 9.00 - பி.ப 02.00 வரை நேரில் சமுகம் தரவும்.
உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**வீடு வாடகைக்கு உண்டு**
இராமநாதன் வீதி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக அமைந்துள்ள மேல் வீடு வாடகைக்கு உண்டு
தொடர்பு: 076 882 8694

**தவறவிடப்பட்டுள்ளது**
கொக்குவில் ஆடியபாதம் வீதிக்கும் திருநெல்வேலிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் கடந்த 13.06.2025 வெள்ளிக்கிழமை கனகசபை கருணாகரன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் (A0159915) அடங்கிய கைப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்
தொடர்பு: 077 535 4851

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

**Group Classes**
A/L Physics, Chemistry Group Classes நடைபெறுகின்றன.
இடம் - யாழ்ப்பாணம் Dialog office இற்கு பின்புறம்
PHYSICS : வெள்ளி - சனி மாலை 05.30 - 07.00
Waves and Vibrations ஆரம்பமாகின்றது
CHEMISTRY : செவ்வாய் - வியாழன் மாலை 05.30 - 07.00
Inorganic chemistry ஆரம்பம்
Paper Class - ஞாயிறு மாலை 05.30 - 07.00
Personal Classes செய்து விடப்படும்.
தொடர்பு: 076 230 6081

**English Class**
தனி மற்றும் குழு வகுப்புகள் அல்லது Zoom மூலமாகவும்
Gr 1 To O/L
And
for English beginners
Grammar with Spoken
School syllabus
T.P: 077 331 4608

**கட்டட வேலை நிர்மாணம்**
அனைத்து விதமான கட்டட வேலைகளும் Contract முறையில் செய்து தரப்படும்.
072 941 2994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.